# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்

---

*[1982, பெப்ரவரி மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1982, பெப்ரவரி மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 35 தபாற் செலவு : சதம் 50

# 1982 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்

[1982, பெப்ரவரி மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 8/81
1429

**1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் :—

"(2) பத்து ரூபாவாகவோ அல்லது அதற்கு அதிகமானதாகவோ திரண்டவையாய் கணக்கொன்றிலுள்ள எவையேனும் பணங்கள், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கைமாற்றப்படுவதன் முன்னர் வங்கியானது, எந்த ஆளுடைய கணக்கு உறங்குநிலையிலிருக்கின்றதோ அந்த ஆளின் கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு, கோரப்படாத வைப்புகள் நிதியத்துக்கு அத்தகைய பணங்களைக் கைமாற்றுவதற்கான அதனது முன்னத்தைத் தெரிவித்து எழுத்திலான கடிதத் தொடர்பொன்றினை அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், எழுத்திலான அத்தகைய கடிதத்தொடர்பு அனுப்பப்பட்ட தேதிக்குப் பின்னர் மூன்று மாதங்களுக்குள் மறுமொழி எதுவும் கிடைக்கப்பெறாவிடின் எந்த ஆளின் பெயரில் அந்தக் கணக்கானது இருக்கின்றதோ அந்த ஆளின் பெயரையும், அந்தக் கணக்கானது ஏழு ஆண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு உறங்குநிலையிலிருந்திருக்கின்றதென்ற நிகழ்வையும், அந்தக் கணக்கிலிருக்கின்ற பணங்கள் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கோரப்படாத வைப்புகள் நிதியத்திற்கு குறித்துரைக்கப்பட்ட தேதியொன்றில் கைமாற்றப்படுவதற்கு முன்னப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிடுகின்ற அறிவிப்பொன்றை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கசெற்றில் வெளியிடுதலும் வேண்டும்." ;

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் :—

"(3) கணக்கானது தமது பெயரில் இருந்ததென அல்லது எந்த ஆளிடமிருந்து தான் உரித்தைப்பெறுகின்றாரோ அந்த ஆளின் பெயரில் இருந்ததென சபை திருப்திப்படுமளவுக்கு எண்பிப்பைக் கொடுத்துதவும் எவரேனும் ஆளின் விருப்பத்தின் பேரில் கோரப்படாத வைப்புகள் நிதியத்திற்குக் கைமாற்றப்

பட்ட எவையேனும் பணங்கள் அல்லது (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஒரு விசேட ஒதுக்கு நிதியத்திற்குக் கைமாற்றப்பட்ட எவையேனும் பணங்கள், அப்பணங்கள் தொடக்கத்தில் எந்தக் கணக்கில் இருந்தனவோ அந்தக் கணக்குக்கு மீளக் மைாற்றப்படலாம்,"; அத்துடன்

(இ) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் புதிய பிரிவை இடுவதன் மூலம் :—

"(5) கணக்கானது தமது பெயரில் இருந்ததென அல்லது எந்த ஆளிடமிருந்து தான் உரித்தைப் பெறுகின்றாரோ அந்த ஆளின் பெயரில் இருந்ததென சபை திருப்திப்படுமளவுக்கு எண்பிப்பைக் கொடுத்துநவும் எவரேனும் ஆளின் விருப்பத்தின் பேரில் (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு விசேட ஒதுக்கு நிதியத்திற்குக் கைமாற்றப்பட்ட எவையேனும் பணங்கள், அப்பணங்கள் எந்தக் கணக்கில் இருந்தனவோ அந்தக் கணக்குக்கு மீளக் கைமாற்றப்படலாம்.".